<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2026ம் வருடம் ஏப்ரல் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை</u>

<u>அசல் வழக்கு எண். 470/2013</u>

<u>CNR Number : TNMD15-000185-2013</u>

--------

பெரியகருப்பன். .... வாதி

/எதிர்/

1. பெ. செல்வமணி.
2. சி. ராஜா.
3. இரா. அம்மாசி*(இறப்பு).
*4. ஜெயக்கொடி.
*5. துரைராஜ். ...பிரதிவாதிகள்
(*Amended as per Order in I.A.No.5 of 2022 dated 25.04.2023)

இவ்வழக்கு 13.03.2026 தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராமசாமி அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 1, 2, 4, 5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. வீரணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கானது தாவா வழக்கிடைச் சொத்து வாதிக்கே தனித்த உரிமை உடைமை உடையதென விளம்புகை செய்ய வேண்டியும், இந்த பிரதிவாதிகளால்

மோசடியாக கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண்.1928/09—செல்லாநிலையது (Null and Void) என விளம்புகை செய்தும் மற்றும் தாவா சொத்தினுள் பிரதிவாதிகளோ அவரது வகையறாக்களோ அவர்கள் மூலம் உரிமை பெறும் வேறு எவருமோ அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடைஞ்சல் செய்யாவண்ணம் அவர்களுக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டும் இதர பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :—

2.1) தாவா வழக்கிடைச் சொத்து நான்கு தலைமுறையாக பூர்வீகமாக கிடைக்கப்பெற்றதாகும். ஆதியில் வாதியின் கொள்ளு தாத்தா சுப்பையா அம்பலத்திற்கு பாத்தியப்பட்டு அவரது மகன்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் வாதியின் தாத்தா சப்பானி அம்பலத்திற்கும், அவருக்குப்பின் வாதி வாரிசு கிரமமாக அடைந்து அனுபவித்து சுவாதீனத்தில் உள்ள சொத்து ஆகும். அதில் பலன்தரக்கூடிய புளிய மரம் ஒன்றும் உள்ளது. வருவாய்துறை ஆவணங்களும் சர்வே எண்.321/21—ல் அடங்கிய 1.00 ஏர்ஸ் புன்செய் காலிமனையிடத்திற்கு வாதியின் பெயரில் பட்டா எண்.3568 எனவும் தாக்கலாகியுள்ளது. சிட்டா, அடங்கல் ஆகியவையும், வாதியின் பெயரிலேயே இன்றளவும் அனுபவித்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்.

2.2) இந்நிலையில் பிரதிவாதிகள், வாதியின் தாவா இடத்தை சட்டத்துக்குப் புறம்பாக அபரிகத்துக் கொள்ளும் எண்ணம் கொண்டு தாவா சொத்துக்கள் இந்த 2, 3 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து எனவும், அதனை தாவா இடத்துடன் மற்றொரு சொத்தையும் சேர்த்து இந்த 1ம் பிரதிவாதிக்கு ஒரு போலியான கிரைய ஆவணத்தின் மூலம் கடந்த 12.08.2009ல் கருங்காலக்குடி சார்பதிவாளர்

அலுவலகத்தில் ஆவண எண்.1928 ஆக கிரையம் பதிந்துள்ளனர். இந்த 3ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் சித்தப்பா, 1, 3 பிரதிவாதிகள் மோசடி செய்யும் எண்ணத்துடன் 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து சட்டத்துக்குப் புறம்பான மோசடியாக கிரையம் பதிந்துள்ளனர். தாவா சொத்திற்கு எந்த விதத்திலும், தொடர்பில்லாத 2, 3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு கிரையம் பதிந்து கொடுக்க யாதொரு அருகதையும் இல்லை.

2.3) தாவா சொத்தை அனுபவித்து சுவாதீனத்திலுள்ள வாதியின் தாவா சொத்தை கிரையம் பெற்றுவிட்டதாக 1ம் பிரதிவாதி வகையறாவால் கூறக் கேட்ட வாதி அவர்களது நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு கடந்த 29.05.2012ம் தேதி வில்லங்கம் பார்க்கும்போது, தான் மேற்படி பிரதிவாதிகள் மோசடியாக கிரையம் பதிந்துள்ளது தெரிய வந்தது. உடனே அதற்கு நகல் பெற்ற வாதி, 1ம் பிரதிவாதியை அணுகி அவர்கள் மேற்கொண்ட மோசடிப் பதிவைப் பற்றி கேட்டபோது, முறையான பதில் ஏதும் கூறாமல் தான் அப்படித்தான் செய்வேன் என்றும், உன்னைப்போல் பலபேரின் இடத்தையும் மோசடியாக தான் பதிந்து கைப்பற்றியுள்ளதாகவும் தான் ஒரு கோடீஸ்வரன் என்றும், வாதியால் முடிந்ததை பார்த்துக்கொள் எனவும், அதிகமாகப் பேசினால் ஆட்களை வைத்து தொலைத்து விடுவதாகவும் மிரட்டியுள்ளார்.

2.4) வாதி இதற்கு மேலும், 1ம் பிரதிவாதியிடம் பேசுவதால் பயனில்லை என உணர்ந்து, மேற்படி, பிரதிவாதிகளின் மோசடி செயல் குறித்து மேலவளவு காவல் நிலையத்தில் உரிய முறையில் புகார் செய்தும் யாதொரு பலனும் இல்லை. அவர்களது உயர் அதிகாரியான மதுரை, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கடந்த 17.03.2013ல் புகார் செய்து அதனை மேலூர் காவல் ஆய்வாளரை விசாரணை செய்யப் பணித்தும், முறையான விசாரணையும் இல்லை. பிரதிவாதிகள் மீது எவ்வித சட்டப்படியான நடவடிக்கையும் இல்லை.

2.5) வாதி சட்டத்தை பெரிதும் மதித்து நடக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆன இந்திய பிரஜை ஆவார். இந்த பிரதிவாதிகளோ சட்டத்தை சிறிதும் மதிக்காத பணபலமும் அடியாட்கள் பலமும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் வாதியின் அமைதியான அனுபோகத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு விளைவிக்கா வண்ணம் அவர்களுக்கு எதிராகவும், ஒரு நிரந்தர தடையுறுத்துக்கட்டளை அவசியமான ஒன்றாகும். எனவே, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>3) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

3.1) வாதி தனது வழக்குரை பாரா 4ல் வழக்கிடைச் சொத்து நான்கு தலைமுறை பூர்வீகத்தின் அடிப்படையில் வாதியின் தாத்தா சப்பாணி அம்பலத்திற்கும், அவருககுபின் வாதியின் தகப்பனார் தங்கராஜ் அவர்களுக்கும் அவருக்குபின் வாதி, வாரிசு கிரமமாக அடைந்து வருகிறார் என்றும், சர்வே எண்.321/21–ல் அடங்கிய 1.00 ஏர்ஸ் புஞ்சை காலி மனையிடத்திற்கு வருவாய்த்துறை ஆவணங்கள் வாதி பெயரில் ஏற்பட்டு உள்ளது என்றும், பாரா 5ல் பிரதிவாதிகள் தாவா இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2, 3 பிரதிவாதிகள் தங்களது இடத்துடன் சேர்ந்து தாவா சொத்தையும், கடந்த 12.08.2009ம் தேதி இந்த 1ம் பிரதிவாதிக்கு கிரையப் பத்திரம் எழுதி பதிந்து கொடுத்துள்ளனர் என்றும், 3ம் பிரதிவாதி இந்த 1ம் பிரதிவாதியின் சித்தப்பா என்பதால் அவர்கள் இருவரும் 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து சட்டத்திற்கு புறம்பாக மோசடிக் கிரையம் பதிந்துள்ளனர் என்றும், அவ்வாறு இந்த 1ம் பிரதிவாதிக்கு கிரையம் பதிந்து கொடுக்க 2, 3 பிரதிவாதிகளுக்கு யாதொரு அருகதையும் இல்லை என்றும், பாரா 6ல் வாதியின் அனுபவத்திலுள்ள தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டதாக கூறக்கேட்ட வாதி கடந்த 29.05.2012ம் தேதி தான் வில்லங்கம் பார்த்து மேற்படி, கிரையத்தைப் பற்றி தெரிந்து கொண்டார் என்றும், பின்னர் வாதி இந்த 1ம்

பிரதிவாதியை அணுகி கேட்டபோது, 1ம் பிரதிவாதி நான் அப்படித் தான் செய்வேன். உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்றும், அதிகம் பேசினால் ஆட்களை வைத்து தொலைத்துவிடுவேன் என்றும், மிரட்டியதாகவும் சொல்லியுள்ளது சிறிதும் உண்மை கலப்படமில்லாமல் வாதியின் கற்பனைத்திறனால் உருவாக்கப்பட்ட மிகச்சிறந்த கட்டுக்கதையாகும். அதில் சிறிதளவும் உண்மை இல்லை.

3.2) மேலும், வழக்குரை பாரா 7ல் வாதி இனிமேல் இந்த 1ம் பிரதிவாதியிடம் பேசி எந்த பலனும் ஏற்படப்போவதில்லை என்று மேலவளவு காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும், அதில் பலன் ஏற்படாத காரணத்தால் மதுரை, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கடந்த 17.08.2013ல் புகார் செய்து, அந்த புகார் மீதான விசாரணையை மேலூர் காவல் ஆய்வாளரிடம் நடத்த பணித்த போதிலும், முறையான விசாரணையும் இல்லை, நடவடிக்கையும் இல்லை என்றும், பாரா 8ல் வாதி சட்டத்தை பெரிதும் மதித்து நடக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றும், பிரதிவாதிகள் பணபலமும், அரசியல் பலமும் மற்றும் அடியாட்கள் பலமும் உள்ளவர்கள் என்றும், அதனால் வாதியின் அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யாவண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை அவசியம் என்றும், பாரா 9ல் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய வேண்டியும், மேலும், 2, 3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லா நிலையது என்றும், வாதியின் அனுபவத்திற்கும், பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பாக நடந்து வரும் வாதியின் கற்பனையால் உருவாக்கப்பட்டுள்ள கட்டுக்கதையாகும்.

3.3) உண்மையில், வாதியும், பிரதிவாதிகளும் சொக்கப்பிள்ளை அம்பலத்தின்

வாரிசுகள் ஆவார்கள். வழக்கிடைச் சொத்தும், இதர சொத்துக்களும் வாதி மற்றும் பிரதிவாதிகளின் மூதாதையரான சொக்கப்பிள்ளை அம்பலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி, சொக்கப்பிள்ளைக்கு கீழ்க்கண்ட விபரப்படி மூன்று ஆண் மக்கள் இருந்துள்ளனர். அவர்கள் முறையே,

1) பெரியகருப்பன் அம்பலம்.

2) சுப்பையா அம்பலம்.

3) சப்பாணி அம்பலம்

மேற்படி, நபர்களில் 2வது நபராக உள்ள சுப்பையா அம்பலம் என்பவர் தான் வாதியின் கொள்ளுத்தாத்தா என்று குறிப்பிட்டுள்ள நபராவார்.

3.4) வாதியின் கொள்ளுத்தாத்தா சுப்பையா என்பவருக்கு

1) பெரியகருப்பன் அம்பலம்.

2) சப்பாணி அம்பலம்.

3) சின்னையா அம்பலம்.

ஆகிய மூன்று மகன்கள் இருந்துள்ளனர். இவர்களில் இரண்டாவது நபர் சப்பாணி அம்பலம் என்பவர் தான் வாதியின் தாத்தா ஆவார். மேற்படி, சப்பாணி அம்பலத்திற்கு வாதியின் தகப்பனார் தங்கராஜ் வாரிசு ஆவார். அதன்படி, வாதி சுப்பையா அம்பலத்தின் வாரிசு ஆவார்.

3.5) அதேபோல், மூதாதையர் சொக்கப்பிள்ளையின் மூத்த மகன் பெரியகருப்பனுக்கும் வாரிசுகள் உள்ளனர். அவர்கள் இந்த வழக்கின் தரப்பினர்கள் அல்ல. பெரியகருப்பனின் வாரிசுகளும், தங்கள் பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை இந்த 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளர்கள்.

3.6) சொக்கப்பிள்ளை மூன்றாவது மகன் சப்பாணி அம்பலத்திற்கு.

1) மன்மதன்.

2) சின்னையா.

என்ற இரண்டு மகன்கள் இருந்துள்ளனர். அதில் மன்மதன் என்பவருக்கு

1) சப்பாணி.

2) ஆண்டிக்காளை.

3) சின்னக்காளை

என்ற மூன்று மகன்கள் உள்ளனர். இவர்களில் மூன்றாவது நபர் சின்னக்காளையின் மகன் ராஜா என்பவர்தான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாவார்.

3.7) அதேபோல், சப்பாணி அம்பலத்தின் இரண்டாவது மகன் சின்னையாவிற்கு ராமக்காளை என்ற ஒரே மகன் இருந்துள்ளார். மேற்படி, ராமக்காளைக்கு 1) பெரியகருப்பன், 2) அம்மாசி என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்களில் பெரிய கருப்பனின் மகன் செல்வமணி என்பவர் தான் 1ம் பிரதிவாதியாவார். மேலும், அம்மாசி என்பவர் தான் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதியாவார். உண்மை இவ்வாறிருக்க வாதி பிரதிவாதிகளுக்கு தொடர்பில்லாத நபர்போல் காண்பித்து வழக்கிடைச் சொத்தும் தனக்குப் பாத்தியப்பட்டது போல் பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தி, தவறான வழிகளில் ஆவணங்கள் உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும், 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு வழக்கிடைச் சொத்து மற்றும் இதரச் சொத்தை கிரையம் எழுதி பதிந்து கொடுத்த பத்திரங்களில் மன்மதன் அம்பலத்தின் வாரிசுகள் அனைவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளனர்.

3.8) மேலும், வழக்கிடைச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு அவரவர்கள் வாரிசு உரிமைப்படி, கிடைத்த சொத்துக்கள் ஆகும். அதனை பிரிவினை செய்த காலத்திலும், வாதி முன்னிலையில் சொத்துக்கள் அளந்து பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது, வஞ்சனையான எண்ணத்தில் வழக்கிடைச் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது

என்று பொய்யான தகவல்களுடன் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். வழக்கிடைச் சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டவையாக இருந்து அவற்றில் ஒரு சில சொத்தை அவர்கள் இந்த 1ம் பிரதிவாதிக்கு முறையாக கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள்.

3.9) மேலும், வாதியும், அவரது மனைவியும் 1ம் பிரதிவாதிக்குச் சொந்தமான வேறொரு சொத்தை கிரையம் கேட்டு அதை 1ம் பிரதிவாதி கிரையம் கொடுக்க மறுத்ததால், வாதியும் அவரது மனைவியும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் கடந்த 2012 ஏப்ரல் மாதம் முதல் தொடர்ந்து இடையூறு செய்து வந்துள்ளனர். அதனால், 1ம் பிரதிவாதியும், வாதியின் மனைவிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கும், மாண்புமிகு. இந்நீதிமன்றத்தில் O.S.No.227/2012–என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், வாதி 1ம் பிரதிவாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2013ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வழக்கிடைச் சொத்தை தவறான வழிகளில் தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து, அதனடிப்படையில் ஆவணங்கள் உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வழக்கிடைச் சொத்து இன்று வரை இந்த 1ம் பிரதிவாதியின் தனித்த அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. அதில் வாதி உள்பட எவருக்கும் எவ்வித உரிமையும், துயர்ச்சியும் கிடையாது.

3.10) வழக்கிடைச் சொத்தை வாதி எந்த ஒரு காலத்திலும், அனுபவித்தது கிடையாது. வழக்கிடைச் சொத்தில் அவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. வாதி தனது உறவினர்களுக்கும், இதர நபர்களுக்கும் எழுதிக் கொடுத்த பதிவுப் பத்திரங்களை ஆய்வு செய்தால், வழக்கிடைச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பது நன்கு புலனாகும். வாதி தனது வழக்குரையில் சொல்லியுள்ளது போல், பிரதிவாதிகள் சட்டத்தை மீறி நடக்கக்கூடியவர்கள் அல்ல.

வாதி அடுத்தவர்களுக்கு தொல்லை கொடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளார்.

3.11) வழக்கிடைச் சொத்தை பொறுத்து வாதி கோரும் எந்தவொரு பரிகாரமும், கிடைக்கத்தக்கதல்ல. வாதியின் 1வது பரிகாரமான விளம்புகை பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம், பிரிவு 25(d) ன்படி, கணக்கிட்டிருப்பது, முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானதாகும். மேலும், வாதி தனது வழக்குரையில் வழக்கிடைச் சொத்து காலிமனையிடம் என்று சொல்லியுள்ள போதிலும், புஞ்சை நிலங்களுக்கான வரிவிதிப்பை கணக்கிட்டு நீதிமன்றக் கட்டணம் சொல்லியுள்ளது நீதிமன்றத்தை ஏமாற்றும் செயலாகும். வாதி குறிப்பிட்டுள்ள வழக்கு மூலமும், முற்றிலும் தவறானதாகும். பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வாதிக்கு எவ்வித வழக்கு மூலமும் கிடையாது. வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல. வாதியின் வழக்கும் சரியாக மதிப்பிடப்படவில்லை. வாதி உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்கு மூலமும் தவறாக உள்ளது. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

04.<u>சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u>

இவ்வழக்கில் வாதியின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதி திரு. பெரியகருப்பன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு.செல்வமணி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>05. எழுவினாக்கள்</u>

1) Whether the suit property belongs to plaintiff as stated in the plaint?

2) Whether the sale deed in Doc.No.1928/2009 is to be declared as null and void?

3) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction in respect of the suit property against the defendants as prayed for?

4) To what other reliefs the plaintiff is entitled for?

ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, மேலே கண்ட 1 முதல் 4 எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு வழக்குரையை திருத்தம் செய்யப்பட்ட பின்பு, கூடுதல் எழுவினாக்கள் வனையப்படவில்லை. இருப்பினும், ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதி தரப்பில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில், விளம்புகைப் பரிகாரம் சம்பந்தமாக எழுவினாக்கள் வனையப்படவில்லை. எனவே, கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்படுகிறது.

<u>கூடுதல் எழுவினா</u>

1) Whether the plaintiff is entitled to the relief of Declaration in respect of the suit property as prayed for?

இந்த வழக்கில் கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளபோதிலும், அது வழக்கை பாதிக்கக்கூடிய வகையில் அமையவில்லை. ஏனென்றால் எழுவினா 1 ஆனது Whether the suit property belongs to plaintiff as stated in the plaint? என வனையப்பட்டுள்ளதால் கூடுதல் எழுவினா வனையப்பட்ட பின்பு, சாட்சியம் எதுவும் விசாரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்று இந்த

நீதிமன்றம் கருதுகின்றது.

6.1) வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்தானது வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், ஆதியில் வாதியின் கொள்ளு தாத்தா சுப்பையா அம்பலத்திற்கு பாத்தியப்பட்டு அவரது மகன்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் வாதியின் தாத்தா சப்பானி அம்பலத்திற்கும், அவருக்குப்பின் வாதி வாரிசு கிரமமாக அடைந்து அனுபவித்து சுவாதீனத்தில் உள்ள சொத்து ஆகும் என்றும், அதில் பலன்தரக்கூடிய புளிய மரம் ஒன்றும் உள்ளது என்றும், வருவாய்துறை ஆவணங்களும் சர்வே எண்.321/21–ல் அடங்கிய 1.00 ஏர்ஸ் புன்செய் காலிமனையிடத்திற்கு வாதியின் பெயரில் பட்டா எண்.3568 எனவும் தாக்கலாகியுள்ளது என்றும், சிட்டா, அடங்கல் ஆகியவையும், வாதியின் பெயரிலேயே இன்றளவும் அனுபவித்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், தாவா சொத்திற்கு எந்தவொரு சம்பந்தமும் இல்லாத 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்து மற்றும் மற்றொரு சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு போலியான கிரைய ஆவணம் மூலம் கடந்த 12.08.2009ல் கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1928/2009–ஆக கிரையம் பதிந்துள்ளனர் என்றும், மேற்படி, கிரையம் எழுதிக் கொடுக்க 2, 3 பிரதிவாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை என்றும், கிரைய ஆவணம் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி கிரைய ஆவணம் செல்லா நிலையது என விளம்புகை செய்யக் கேட்டு தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கேட்டும், தாவா சொத்தின் வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கேட்டும், தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், வாதிட்டார்.

6.2) பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, 1ம் பிரதிவாதி தகுந்த

பிரதிபிரயோஜனத்தின் பேரில் தாவா சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற மற்றொரு சொத்தை வாதி, கிரையம் கொடுக்கக் கேட்டார் என்றும், 1ம் பிரதிவாதி கிரையம் கொடுக்க முன் வராததால் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 2009ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ள நிலையில், 2013ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வாதி பொய்யான விவரங்களை குறிப்பிட்டு பட்டா மாறுதல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாக வாதி தரப்பில் எந்தவொரு மூல ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.3) வாதி தரப்பில், வாதி திரு. பெரியகருப்பன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் 1422ம் பசலிக்கான அடங்கல் கணக்கின் உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டா எண்.3568க்கான கணினி பட்டா அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12.08.2009ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.1928/2009) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.11.1961ம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப் பத்திரம் (ஆவண எண். 2962/1961) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2013ல் வட்டாட்சியருக்கு பட்டா மாறுதல் கோரி கொடுத்த மனு அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1383ம் பசலிக்கான அடங்கல் உண்மை நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.227/2012–ல் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.4) பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதியான திரு. செல்வமணி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

07. எழுவினாக்கள் 1 முதல் 3, கூடுதல் எழுவினா 1–ற்கான தீர்வு :–

1) Whether the suit property belongs to plaintiff as stated in the plaint?

2) Whether the sale deed in Doc.No.1928/2009 is to be declared as null and void?

3) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction in respect of the suit property against the defendants as prayed for?

கூடுதல் எழுவினா – 1) Whether the plaintiff is entitled to the relief of Declaration in respect of the suit property as prayed for?

7.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், மேற்படி, சொத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லாத 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 12.08.2009ம் தேதி ஆவண எண்.1928/2009–ன்படி, கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி, கிரைய ஆவணமானது மோசடியானது என்றும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

7.2) மாறாக, பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு பூர்வீக சொத்து என்றும், 1ம் பிரதிவாதி தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் தாவா சொத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாக வாதி தரப்பில் எந்தவொரு மூல ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 2009ம் ஆண்டு 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வந்த நிலையில் 2013ம் ஆண்டு பட்டாவை

மோசடியாக வாதி பெயருக்கு மாற்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதிட்டார்.

7.3) தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகைப் பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை நிரூபிக்கும் சுமையானது இந்திய சாட்சிய சட்டப்படி, வாதியையே சார்ந்தது ஆகும்.

7.4) இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆக 1422ம் பசலிக்கான அடங்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, அடங்கலில் சர்வே எண்.321/21–த. பெரிய கருப்பன் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆக பட்டா எண்.3568–க்கான 10(1) சிட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உரிமையாளர் பெயர் தங்கராஜ் மகன் பெரிய கருப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணமானது 2, 3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 ஆனது ஆவண எண்.2962/1961–விடுதலைப் பத்திரம் என்பது தெரிய வருகின்றது.

7.5) வாதி தரப்பு வழக்குப்படி, தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று வாதிடப்படுகிறது. வா.சா.ஆ.4 விடுதலைப் பத்திரத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, "39வது அயிட்ட சொத்தாக 38 நிர் பட்டாவில் பு R.S.321–21வது லெட்டர் 03–ல் நடுப்புறம் 0.1"– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சொத்திற்கு எல்கையாக "39வது இலக்கச் சொத்திற்கு எல்கை ஓடைக்கும் தெற்கு இராமநாதன் தோட்டத்திற்கும் மேற்கு, வெள்ளைச்சாமி நஞ்சைக்கும் வடக்கு, பழனித் தோட்டத்திற்கும் கிழக்கு இதற்குள்பட்டது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7.6) இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை சொத்து விபரமாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், 44 நிர் மேலவளவு கிராமம் பட்டா எண்.

3568, புல எண்.321/21–0.01.00 ஏர்ஸ் புஞ்சை வீட்டடி காலி மனையிடம்.

அதற்கு நான்குமால்:

கிழக்கே – செல்லம் வயல்.

வடக்கே – ஆத்துக்கால்.

தெற்கே – செல்லம் வயல்.

மேற்கே – சர்வே 321/20 காலியிடம்"

7.7) மேலும், பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது RTR.எண்.3202/2011–கோப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது. மேற்படி, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.321/21 மற்றும் சர்வே எண்.321/8–ஆகியவற்றைப் பொறுத்து பட்டா எண்.1058–ல் வாதியின் தந்தை பெயரிலிருந்து வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக் கேட்டு வாதியால் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, விண்ணப்பத்துடன் வாதி கொடுத்த வாக்குமூலத்தில் பட்டாவில் தங்கராஜ் மகன் பெரிய கருப்பன் என்பதற்கு பதிலாக பெரியகருப்பன் மகன் தங்கராஜ் என தவறுதலாக உள்ளது என்றும், எனவே, பட்டாவில் பெயர் மாற்றம் செய்து தர வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.8) மேலும், 1058 பட்டாவில் பெரிய கருப்பன் மகன் தங்கராஜ் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, பட்டாவில் சர்வே எண்.1058 உட்பிரிவுகள். 5C1, 10B1, 21, 8, 11 ஆகிய ஐந்து உட்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.9) பி.வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட ஆவணத்தில் கீழ்க்கண்டாவறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஆஜர் பட்டாவில் கண்ட பெரியகருப்பன் மகன் தங்கராஜ் என்ற பெயர் தவறுதலாக உள்ளது. அவரின் உண்மை பெயர் தங்கராஜ் மகன் பெரிய கருப்பன்

என்பதாகும். இதற்கு ஆதாரமாக மனுதாரரின் குடும்ப அட்டை நகல், அடையாள அட்டை நகல் அவரது தந்தையாரின் இறப்பு சான்றிதழ் நகல் ஆகியவை சமர்ப்பித்துள்ளார். மேலும், பட்டா எண்.1058–ல் கண்ட சர்வே எண்.321/21, சர்வே எண்.321/8–ஆகியவற்றை நீக்கி மனுதாரர் பெயரில் (தங்கராஜ் மகன் பெரிய கருப்பன்) பட்டா தாக்கல் செய்யப்படுகிறது."

7.10) அதாவது, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, பட்டா எண்.1058–தங்கராஜ் மகன் பெரியகருப்பன் என்பதற்கு பதிலாக பெரியகருப்பன் மகன் தங்கராஜ் உள்ள தவறை திருத்தம் செய்யக் கேட்டு வாதி கொடுத்த மனுவின் அடிப்படையில், பட்டா எண்.1058–ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.2–ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1383ம் பசலிக்கான அடங்கல் என்பது தெரிய வருகிறது. மேற்படி, பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.321/8, சர்வே எண்.321/21–ஆகியவை சொ. பெரிய கருப்பன் என்பவர் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகின்றது.

7.11) இது சம்பந்தமாக வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 செண்டு ஆகும். அதற்கு ஆதியில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.12) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "இந்த சொத்திற்கு வரி செலுத்தியதற்கான இரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை நான் 2013 டிசம்பர் மாதம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கிடைச் சொத்திற்கான பட்டா 2013–ல் அக்டோபர் மாதம் தான் என் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். ஆனால், அதற்கு முன்பாகவே என் பெயருக்கு பட்டா இருந்தது. அக்டோபர் 2013க்கு முன்னதாக என் பெயருக்கு பட்டா இருந்ததற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல்

செய்யவில்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.13) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "2013ல் வட்டாட்சியருக்கு பட்டா மாறுதல் கோரி கொடுத்த மனுவில் என் தந்தையார் பெயரில் உள்ள பட்டாவை என் பெயருக்கு மாற்றம் செய்யக் கோரி மனுக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவின் நகல் மற்றும் நான் கொடுத்த வாக்குமூலம் தொடர்புடைய ஆவணங்கள் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேற்படி, ஆவணம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பெறப்பட்டதாகும். இந்த சொத்து 1058 பட்டாவில் இருந்தது என்றால் நினைவில்லை. அந்த பட்டாவில் மொத்தம் ஐந்து இலக்கச் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த ஐந்து இலக்கச் சொத்துக்களில் குறிப்பாக சர்வே எண்.321–20, 321–8 ஆகிய இரண்டு இலக்கச் சொத்துக்களை மட்டும் தான் என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யக் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். மீதமுள்ள மூன்று இலக்கச் சொத்துக்களை ஏன் பட்டா மாறுதல் செய்யக் கோரவில்லை என்றால் அது என் பெயரிலும், என் அப்பா பெயரிலும் இல்லை. பெரியகருப்பன் மகன் தங்கராசு என்பவர் யார் என்றால் அப்படி ஒரு நபரே இல்லை. இல்லாத ஒரு நபரின் பெயரில் உள்ள பட்டாவை ஆதாரமாக வைத்து நான் கொடுத்த மனுவே தவறானது என்றால் மனுவில் எழுதிய வாசகங்கள் வேண்டுமானால் தவறாக இருக்கலாம். நான் குறிப்பிட்டுச் சொல்லியுள்ள இரண்டு இலக்கச் சொத்துக்கள் சொ. பெரியகருப்பன் பெயருக்கு பட்டா இருந்துள்ளது என்றால் சரிதான். அவர் எனது தாத்தாவின் சகோதரர் ஆவார். இந்த ஆவணத்தில் சொ. பெரியகருப்பன் என்று தான் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தாவின் தகப்பனார் பெயர் சுப்பையா என்றால் சரிதான். இந்த அடங்கலில் வழக்கிடைச் சொத்திற்கும், மேலும், ஒரு சொத்திற்கும் சொ. பெரியகருப்பன் என்று இருப்பதால் என் தாத்தாவின் சகோதரர் என்பது தவறு

என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.14) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "நான் 2013ம் வருடம் பட்டா மாறுதல் செய்துள்ள சொத்துக்களில் இன்னும் ஒன்று சர்வே எண்.321–8 ஆகும். அந்த 321–8யைப் பொறுத்து கடந்த 08.08.2009ம் தேதியில் இந்த 1ம் பிரதிவாதி செல்வமணிக்கு சுப்பையன் அம்பலம் மகன் பிச்சை என்பவரும், செல்லம் மனைவி கருப்பாயி என்பவரும் ஒரு பதிவு செய்த கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் 12.08.2009ல் 2, 3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு மற்றொரு சொத்தைப் பொறுத்து கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில், அதை பொறுத்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் முழு விஸ்தீரணம் எனக்கு பாத்தியமில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.2ல் சர்வே எண்.321–8–யைப் பொறுத்து முழு விஸ்தீரணத்திற்கும் என் பெயரில் பட்டா மாறுதல் செய்திருப்பது மோசடியானது என்றால் எனக்கு நான்கு செண்டு மட்டுமே பாத்தியம், முழு விஸ்தீரணமும் பாத்தியம் கிடையாது. முழு விஸ்தீரணத்திற்கும் எனது பெயரில் தவறாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.15) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "மேலவளவில் உள்ள என் வீட்டிற்கு வடபுறம் ரோடு உள்ளதா என்றால் தென்புறம் ரோடு உள்ளது. அப்துல்கலாம் தொடக்கப்பள்ளிக்கு மேற்கே காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கும், மேற்கே உள்ள ஓட்டு வீட்டினை நான் என் மருமகளுக்கு எழுதிக் கொடுத்துவிட்டேன். அந்த வீட்டிற்கும், பள்ளிக்கூடத்திற்கும் இடையே உள்ள இடத்தின் சர்வே எண்.322–12–என்றால் சரிதான். அந்த இடத்தை 1ம் பிரதிவாதி செல்வமணி கடந்த 03.08.2009ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால்

வாங்கியுள்ளார். அந்த இடம் எனக்கு சேகரமாக இருப்பதால், அந்த இடத்தை எனக்கு கிரையம் கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வெளியூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனவே, நான் கடந்த 23.04.2012–ல் அந்த இடத்துக்குள் ஊன்றியிருந்த கல்கால்களை பிடுங்கி, ஆக்கிரமிக்க முயற்சித்தேன் என்றால் சரியல்ல. அதற்காக 1ம் பிரதிவாதி என் மனைவி சந்திரா மீது விடுமுறைகால நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.227/2012–ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.16) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "நான் என் மனைவிக்கு 12.08.2009ல் சில சொத்துக்களை கிரையம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள சர்வே எண்.321–8க்கு கிழக்கே தாவாச் சொத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.321–8ஐப் பொறுத்தும், இதர சொத்துக்களைப் பொறுத்தும் நான் கடந்த 12.08.2009ல் என மனைவி சந்திரா பெயருக்கு ஒரு கிரையப் பத்திரம் எழுதிப் பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சர்வே எண்.321–9 இரண்டு இலக்கச் சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.321–8 சொத்தின் நான்குமாலில் கிழக்குப் பக்கம் 1ம் பிரதிவாதி இடம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கிடைச் சொத்து எனக்கு எந்த உரிமையும் இல்லாத சொத்து என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.17) அதாவது, இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் தாவா சொத்து வா.சா.ஆ.4 – 1961ம் ஆண்டு விடுதலை ஆவணம் மூலம் வாதி குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வருகிறது என்று வாதி தரப்பில், வாதிடும்பட்சத்தில் வா.சா.ஆ.4 – 1961ம் ஆண்டு விடுதலை ஆவணம் குறித்து

வாதி தரப்பில் வழக்குரையிலும் எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை. மேலும், 1961ம் ஆண்டிற்கு பின்பு வாதியின் குடும்பத்தினரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

7.18) இந்த வழக்கில் வா.சா.ஆ.2 பட்டாவின் அடிப்படையிலேயே தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக முன்னிறுத்தப்படுகிறது. ஆனால், பி.வா.சா.ஆ.1 வாதியின் பெயருக்கு பட்டா ஏற்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பட்டா எண்.1058ன் அடிப்படையில் பெரியகருப்பன் மகன் தங்கராஜ் என்பவருக்கு சர்வே எண்.321–ல் உட்பிரிவு 5C1, 10B1, 21, 8, 11 – என ஐந்து சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், அதில் சர்வே எண்.321/21–மற்றும் சர்வே எண்.321/8–ஆகிய சொத்துக்கள் மட்டுமே வாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், அதுவும் தங்கராஜ் மகன் பெரிய கருப்பன் என்பதற்கு பதிலாக பெரிய கருப்பன் மகன் தங்கராஜ் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. மேலும், வா.சா.1 குறுக்கு விசாரணையில் தாவா சொத்தைப் பொறுத்து ஆதியில் யார் பெயரில் பட்டா இருந்து வந்தது என்றால் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.1 குறுக்கு விசாரணையில், சர்வே எண்.321/8–யைப் பொறுத்து வாதிக்கு 4 செண்ட் இடம் மட்டுமே பாத்தியம் என சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.321/8–யைப் பொறுத்து 4.50 ஏர்ஸ் வாதியின் பெயரில் தாக்கலாகியுள்ளது தெரிய வருகிறது.

7.19) மேலும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையின் அடிப்படையில், சர்வே எண்.321/8–யைப் பொறுத்தும், இதர சொத்துக்களைப் பொறுத்தும் நான் கடந்த

12.08.2009ல் என் மனைவி சந்திரா பெயருக்கு ஒரு கிரையப் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சர்வே எண்.321/8– இரண்டு இலக்கச் சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.321/8–சொத்தின் நான்குமாலில் கிழக்குப் பக்கம் 1ம் பிரதிவாதி இடம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

7.20) தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாக வா.சா.ஆ.2 பட்டாவைத் தவிர வேறு எந்த ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், தாவா சொத்தை நான்கு தலைமுறைகளாக வாதியின் குடும்பத்தினர் அனுபவித்து வருகிறார்கள் என்று வாதி தரப்பில் வாதிடும்பட்சத்தில் தாவா சொத்தில் வாதியின் அனுபவம் சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படாமல் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என வாதி கோரும் விளம்புகைப் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. வாதி கோரும் விளம்புகைப் பரிகாரமே வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்பதால் 2, 3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம், ஆவண எண்.1928/2009–செல்லக்கூடியதல்ல என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், வாதி கோரும் விளம்புகைப் பரிகாரமே வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்பதால் தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினாக்கள் 1 முதல் 3 மற்றும் கூடுதல் எழுவினா 1 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

<u>08. எழுவினா 4ற்கான தீர்வு</u> :

4) To what other reliefs the plaintiff is entitled for?

எழுவினாக்கள் 1 முதல் 3 மற்றும் கூடுதல் எழுவினா 1 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு கண்டுள்ளபடியால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 4–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.10 17:23:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

1.வா.சா.1 – திரு. பெரிய கருப்பன்.

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| வாதி தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | --------- | 1422ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.2 | --------- | பட்டா எண்.3568க்கான கணினி பட்டா. | அசல் |
| வா.சா.ஆ.3 | 12.08.2009 | கிரையப் பத்திரம் (ஆவண எண்.1928/2009) | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4 | 04.11.1961 | பாகப் பாத்திய விடுதலைப் பத்திரம். (ஆவண எண். 2962/1961) | சான்றிட்ட நகல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

1. பி.வா.சா.1 – செல்வமணி.

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 17.10.2013 | வட்டாட்சியருக்கு பட்டா மாறுதல் கோரி கொடுத்த மனு. | அசல். |
| பி.வா.சா.ஆ.2 | --------- | 1383ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| பி.வா.சா.ஆ.3 | --------- | அசல் வழக்கு எண்.227/2012-ன் பிராது. | நகல். |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.10 17:23:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
அசல் வழக்கு எண்.470/2013
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் 10.04.2026